ATTRIBUTES OF THE HINDU TRIAD.

[Proving by reference to the absurd legends of the Puranic Mythology, which none who adhere to Brahminism can with consistency deny, and by deductions fairly drawn therefrom, that none of the triad possess the attributes of Deity; concluding by an exhortation to seek and trust in the only true God.]

மும்மூர்த்தி இலட்சணம்.

மும்மூர்த்திகளில் ஒருவராகிலும் மெய்த்தெய்வமல்ல என்பதைக் காட்டியது.

சருவலோகங்களுக்குங் காரணராகிய கடவுள் அநாதியாய் சொயம்புவாய் முடிவில்லாதவராய் அரூபியாய் ஒருதன்மையாயிருப்பவரும் சருவவல்லபம் சருவவியாபகம் சருவஞானம் பரிசுத்தம் நீதி அன்பு முதலியவைகளுள்ளவருமாயிருக்கவேண்டும். இந்த இலட்சணங்களில்லாதவர்களைத் தெய்வமென்று வணங்குகிறவர்கள் பசாசாவார்கள்.

அப்படியிருக்கவுந் தமிழர் பிரமா விட்டுணு உருத்திரன் முதலானவர்களைத் தெய்வங்களென்றெண்ணி வழிபடுகிறார்கள். மேற்குறித்த இலட்சணங்கள் இவர்களிடத்திலுண்டோவென்றும் இவர்களை வழிபடுகிறவர்கள் என்னத்து

5th Ed.] AMERICAN MISSION PRESS, JAFFNA. [5, 00$
† 1844.

தீரு எதுவாயிருப்பார்களென்றும் ஆராய்ந்து பார்ப்போமாக.

முதலாவது.

பிரமலட்சணம்.

க. பிரமதேவர் பரமசிவனுடைய முடியைத் தேடிக் காணுதநிலும் அசுரரோடும் விட்டுணுவோடும் யுத்தம்பண்ணி மேற்கொள்ளாமற் போனதிலும் சருவவல்லவரல்ல

உ. முருகமூர்த்தி பிடித்துச் சிறையிலே வைக்கத் தம்முடைய படைப்புத் தொழிலும் இழந்து கந்த மலையிலே சிறையிருந்ததிலும் விட்டுணு எடுத்து விழுங்க அவருடைய வயிற்றிலே அடங்கியிருந்ததிலும் ஓரிருஷி பெண் சாதி சாபத்திலுலே அவளுடைய வீட்டிலே குழந்தையாய்க் கிடந்ததிலுஞ் சருவவியாபகரல்லரென்று அறியலாம்.

கூ. முருகமூர்த்தி பிரணவத்திற்குப் பொருள்கேட்கத் தெரியாமலிருந்ததிலுந் தமக்கு வருகிற கேடு அறியாமற் பரமசிவனே இகழ்ந்து தமது தலையில் ஒன்றை இழந்து அந்தத் தலையைப் பெற்றுக்கொள்ள இன்னும் தவசுபண்ணுவதிலும் ஞானமுள்ளவரல்ல.

ச. காயத்திரி சாவித்திரி சரசுவதி என்னும் பெண்களோடே கூடியிருந்துந் தாம் படைத்த நிலோத்தமை மேலே ஆசைகொண்டு தொடர அவள் ஒரு கிளியாய் ஓட இவரும் ஒ

ரு ஆண்கிளியாய்த் தொடர்ந்து போனதிலு லே பரிசுத்தரல்லரென்று அறியலாம்.

ஙு. இவர் ஒரு அன்னப்பட்சியினது ரூப மாகிச் சிவனுடைய முடியைத் தேடிக் காணுமத் கண்டேன் என்று பொய் சொன்னதிலுலே நீதியுள்ளவருமல்ல.

சுரு. இராவணன் கும்பகன்னன் இந்திரசித் து நிவாதகவச காலகேயரென்னும் இராட்சத ர் தம்மை நினைத்துத் தவசுபண்ணினதிலுலே தேவர்களையும் மனிதர்களையும் இடுக்கண்செ ய்ய வரங்கொடுத்ததிலுலே அன்பள்ளவரல்ல ரென்றும் அறியலாம்.

இரண்டாவது.

விட்டுணுலட்சணம்.

க. இனி விட்டுணு காரணகத்தாவோ என் று பார்த்தால் ஒரு யாகத்திலே தேவர்கள் எல் லாரும் அவருக்குப் பயந்து திருவாரூருக்குச் சிவனிடத்திலே போக இவரும் அவர்களைத் து ரத்திக்கொண்டு போய்த் திருவாரூரிலே வந்த பொழுது வில்லை ஊன்றிக்கொண்டு மயங்கிப் போய் நின்றவிட வில்காணக் கறையாளதத் தேவேந்திரன் அரிக்க வில்லிற் குதை இவரு டைய தலையை இடறிப்போட்டதிலுலும் பார் வதியுடைய சாபத்திலுற் பாம்பாய்ப் போன திலுலும் ஒரு பன்றியினது ரூபமாகி ஒரு அக் கனி மலையின் அடியைக் கண்டு கொள்ளக் கூ

டாதேபோனதினாலும் சராசந்தனுக்குஞ் சூர
ன் முதலிய அசுரருக்கும் பயந்து அவர்களை
வெல்லக்கூடாததினாலுஞ் சருவவல்லவரல்ல.

உ. பிரமாவும் விட்டுணுவும் வாக்குவாதம்
பண்ணினபொழுது பிரமா இவரை யெடுத்து
விழுங்கிரென்றும் அசுரர் செய்த நெருக்க
த்தைத் தேவர்கள் இவரிடத்திற் போய்ச்சொ
ல்ல இவரும் பரமசிவனிடத்திற்கு வைகுந்தத்
தை விட்டெழுந்துபோனரென்றும் இவருடை
ய வீட்டுக்குக் காவற்காரர் இருக்கிறார்களென்று
ம் அந்த வீட்டிலே இவர் இருக்கிறரென்றும்
இவரைக் காண்கிறதற்கு இவருடைய வீட்டுக்
கு இருஷிகள் வந்தார்களென்றுஞ் சொல்லு
கையால் இவர் சருவ வியாபகரல்ல.

ங தமக்குச் சாபம் வருமென்றறியாமற் ச
ந்தரன் பெண்சாதியுடனே கள்ளத்தனமாய்
அவள் இவரென்று அறியாதபடிக்குச் சுலந்த
ரனுடைய உருபமாய்ப் புணரப் பின்பு அவள்
அறிந்து சொன்ன சாபத்தை அனுபவிக்கும்ப
டி பிறந்து தம்முடைய பெண்சாதியை இரா
வணன் கொண்டுபோக இடம் பண்ணிக்கொண்
டதுமல்லாமல் அவன் கொண்டுபோய் எங்கே
வைத்தானென்றும் என்ன சம்பவித்ததென்
றும் அறியாதபடியாலும் ஞானமுள்ளவரல்ல.

ச. கோவலஸ்திரிகளோடும் பிருந்தை முத
லான அனேகம் பிறர்தாரங்களோடும் விபசார
ம்பண்ணினதினாலும் தாம் ஒரு மோகினியாக
ச் சிவனோடே சேர்ந்து ஐயனாரைப் பெற்றது
னாலும் பரிசுத்தரல்லவென்றுங் காணலாம்.

ரு. இடையர் சேரியில் வெண்ணெய் மூதலானவைகளைத் திருடினதிலும் தாரியோதனனையும் பாண்டவர்களையும் பகைமூட்டிப் பூபாரந் தீர்க்கிறேனென்று யுத்தம் பண்ணுவித்து இராக்கள் எல்லாரையுஞ் செயித்ததிலும் பரசுராம அவதாரம்பண்ணிச் சூரிய குலத்து இராசாக்கள் எல்லாரையுங் கொன்றதிலும் திருப்பாற் கடல் கடைந்தபொழுது கூடக் கடைந்த அறுபத்தாறுகோடி அசுரருக்கும் அமுதங் கிடையாமற் போகும்படி அவர்கள் ஒருவரை ஒருவர் கொன்று போட மாயஞ்செய்ததிலும் நீதியுள்ளவரல்ல.

சு. தம்முடைய மாமனுடைய கஞ்சனைக் கொன்றதிலும் மருமகனுடைய வாளபீமனைக்கொன்றுபோட இவர் எது உண்டாக்கினதிலும் வேறும் அநேகரைத் தயவில்லாமற் கொன்று போட்டதிலும் அன்புள்ளவரல்லரென்றுங் காணலாம்.

முன்றுவது.

உருத்திரலட்சணம்.

க பார்வதி சிவனுடனே வெறுத்துக்கொண்டு தன் மண்டபத்திற் கதவைப் பூட்ட அதைத் திறக்க வல்லபமில்லாமல் விரதம் அனுட்டித்தாரென்று சொல்லப்படுகிறதிலும்

ஒரு இருஷி பெண்சாதி சிவனைச் சிறு குழந்தை யாயிருக்கும்படி சபிக்க அந்தச் சாபத்திலுலே அநேக காலமாகச் சிறுகுழந்தையாய்க் கிடந் து அந்தச் சாபத்தை நீக்கிக்கொள்ளமாட்டா மற் போனதிலுலும் தாருகா வனத்திருஷி பெ ண்களுடைய கற்பை அழித்தபொழுது பிரு கிருஷி கொடுத்த சாபம் இவருக்குப் பலிதத்தி லுலும் காசிப்பட்டணத்தை ஆண்ட திவோத ாதன் தன்னூரில் இருக்கவேண்டாமென்று அ வரைத் துரத்த அந்த ஊரிலே இருக்க ஆசை ப்பட்டுங் கூடாமல் மறு ஊரிலே போயிருந் ததிலுலும் வாணசுரன் தனது கோட்டைக்கு இவரைக் காவலாக வைத்துவிட அவனைத் தா ம் மேற்கொள்ளக்கூடாமற் போனதிலுலும் சலீசுவரனுக்குப் பயந்து பறைச்சேரியிற் கு ளத்திற்குள்ளே எருமைமாடாகக் கிடந்து ப றையர் அடிக்க வருத்தப்பட்டதிலுலும் பல் மாசுரன் என்கிற அசுரனுக்குத் தொட்டவிட ம் எரிந்துபோக வரங்கொடுத்து அவன் இவ ரைத் தொடத்தொடர ஓடிப்போய்க் கோவை காயிக்குள்ளே ஒளித்ததிலுலும் இவர் சருவ வல்லவர் அல்லரென்றுங் காண்கின்றது.

உ. பார்வதி தனது மண்டபத்திற் கதவைப் பூட்டினபொழுது அதற்குட் பிரவேசிக்கக் கூ டாமற் போனதிலுலும் இருஷி பத்தினி சபித் தபொழுது குழந்தையாய் அந்த வீட்டிற்குள் ளே இருந்தபடியிலுலும் இராசாவுடைய கட் டளையிலுலே காசிப் பட்டணத்திலேயிலாம ற் போனதிலுலும் தம்மைத் தொட்டெரித்து

ப்போடத் தொடர்ந்தவனுக்குப் பயந்து கோவைக் காய்க்குள்ளே ஒளித்ததிலும் இன்ன ஊரிலே இன்ன கோவிலிலே இருக்கிறார் அங்கே போய் அவரை வணங்க வேண்டுமென்று சொல்வதிலும் சருவ வியாபகமுள்ளவரல்லரென்றுங் காண்கின்றது.

ஈ. அசுரனுக்கு வரங்கொடுத்த பொழுது தமமைத் தொடுவானென்றும் அதினாலே தாம் எரிந்து போவோமென்றும் அறியாததிலும் தாருகாவனத்தில் இருஷி பெண்களுடைய கற்பை அழித்தபொழுது இருஷிகள் தம்மைச் சபிப்பார்களென்று முன்னறியாததிலும் சலீசுவரனுக்கு வரங்கொடுத்த பொழுது அவன் தம்மைப் பிடிப்பானென்று அறியாததிலும் ஞானமுள்ளவரல்லரென்றும் அறியலாம்.

உ. மோகினியோடே புணர்ந்ததிலும் பார்வதியைப் பெண்ணாக வைத்திருக்கிறதிலும் இருஷி பெண்களுடைய கற்பை அழித்ததிலும் பரிசுத்தரல்லரென்றும் அறியலாம்.

ஊ. பார்வதியோடே சூதாடின பொழுது பார்வதிக்குத் தான் தோற்றுந் தான் வென்றேனென்று சொல்லும்படி விட்டுணுவுக்குச் சைகைகாட்டினதிலும் சிவ சமயத்திலே நிலைகொண்டிருந்த அசுரர்களை விட்டுணுவை விட்டு மயக்கி அவர்களைத் தவறப்பண்ணி அவர்களை எரித்ததிலும் நீதியுள்ளவர் அல்லரென்றுங் காணப்படுகின்றது.

ரு. பொல்லாத இராட்சதருக்கும் அசுரருக்

கும் பலத்தையும் அழியாத தேகத்தையும் வெ
குநாள் இருப்பதற்கான ஆயுளையும் கொடுத்து
அவர்கள் தேவர்களையும் மனிதரையும் மிருகங்
களையும் இடுக்கண்படுத்த இடங்கொடுத்திரு
லே அன்புள்ளவரல்லரென்றுங் காண்கின்றது.

எ. சத்தியிலுலே உண்டானவரென்றும் அ
ந்தச் சத்திக்கு இவர் கீழானவரென்றுஞ் சொ
ல்லப்படும் ஆகையால் இவர் அநாதியானவரல்
லவென்றுந் தானுயிருக்கிறவரல்லரென்றுங் கா
ண்கின்றது.

அ. அநாதியாயிருக்கிற வஸ்து அழியாதெ
ன்றுந் தோற்றமுள்ள பொருள்களெல்லாம்
அழிந்து போமென்றுஞ் சைவசமய சாத்திர
ங்களிலே சொல்லப்படுகின்றது. அதிற்படி
அவர் முடிவுள்ளவரென்றுங் காண்கின்றது.

கூ. ஐந்துமுகமென்றும் பத்துக்கையென்
றும் முகத்திற்கு மூன்று கண்ணென்றும் புலி
த்தோலை உடுத்தாரென்றும் கங்கையைத் தரி
த்தாரென்றும் பாம்பையும் எலும்பையும் த
லையோடுகளையும் மானையும் மழுவையும் தரித்
தாரென்றுஞ் சொல்லுகையால் அருபியல்ல எ
ன்றுங் காண்கின்றது.

ஙி. சிலகாலங்களிலே புத்தியுள்ளவராகவுஞ்
சிலகாலங்களிலே புத்தியில்லாமல் தம்முடைய
பெண்சாதியை மற்றொருவனுக்குக் கொடுத்த
திறலும் பேய்களுடனே சுடுகாட்டிலே இருந்து சாம்பலையணிந்து திரிகிறதிறலும் மாறுதன்மை உடையவரல்லரென்றுங் கா
ண்கின்றது.

இப்படியே மேற்சொல்லிய பரிசுத்த குணங்களுக்கு எதிரான அசுத்த குணங்களுடையவர்; ஆகையாற் சிவனையுங் காரணகர்த்தாவென்று சொல்லக்கூடியதல்ல.

இனி விநாயகன் வீரபத்திரன் ஐயனார் கந்த சுவாமி வயிரவர் திருக்கை பத்திரகாளி என்பவர்கள் வீரத்திறங்களை உடையவர்களென்றும் அநேகம்பேரைக் கொன்றுபோட்டார்கள் என்றும் அவர்கள் பற்பல அசுத்தமான கிரியைகளை நடப்பித்தார்களென்றுஞ் சொல்லுகிறதே அன்றிப் படைத்தல் காத்தல் என்கிற கர்த்தர்த்துவமுள்ளவர்களென்று சொல்லுகிறதில்லை.

ஆதலால் தமிழரே! நீங்கள் வணங்குகிறதேவர்கள் எல்லாரும் பரிசுத்த தேவலட்சணம் இல்லாதிருக்கிறதுமன்றி அவைகளுக்கு எதிரான அசுத்த லட்சணமுடையவர்கள். இவர்கள் உங்கள் பாவத்தை நீக்குவார்களென்றும் உங்களுக்கு மோட்சத்தைக் கொடுக்கக் கூடுமென்றும் நீங்கள் எண்ணுவது பெரிய மதியீனம்.

நிலைதவறாகிய நாங்கள் சொல்லுகிற பிதாக் குமாரன் பரிசுத்த ஆவியாகிய திரியத்துவமுடைய பராபரனே நீங்கள் சொல்லுகிற மும்மூர்த்திகளைப்போலே வேற்றுமைப் பாடின்றி ஒரே இயல்பாய் அம்மூவரும் அநாதியாயும் மேற்குறித்த சருவ வல்லப முதலிய குணக்கள் பொருந்தி ஒரு தன்மையாய்த் தமது

மகிமைக்கும் மனிதருடைய தன்மைக்கும் ப
ழுதுவராமல் மூன்று தொழிலை இயற்றி அம்
மூன்று தொழிலிலும் ஒரே காரியத்தைத் நி
றைவேறச் செய்துவருகிறார். அக்கடவுளைப்
பற்றிக்கொண்டு அவர் கொடுத்த பரிசுத்த கட்
டளைகளுக்கு அமைந்தவர்கள் நாளுக்கு நாட்
பரிசுத்தத்திலே வளர்ந்து முடிவிலே முழுது
ஞ் சுத்தமுள்ளவர்களாய் மோட்சத்திற் சேர்ந்
திருப்பார்கள். அவரை விட்டுப் பரிசுத்த மி
ல்லாதவர்களைத் தெய்வமென்று வழிபடுகிறவ
ர்கள் அவர்களைப்போலே அசுத்தத்திலே பழ
கிப் பொல்லாதவர்களாயிருந்து எங்கள் தேவ
ர்கள் காமாதிகளுக்கு இடாயிருக்கவில்லையோ!
நாங்களும் அப்படியிருந்தால் என்னவென்று
எண்ணிப் பரிசுத்தமுள்ள கடவுளுக்கு விரோ
தமாய் நடந்து முடிவிலே பரிசுத்தமில்லாத
பேய்களோடே நரகத்தில் வேதனைப்படுவார்
கள் என்று உங்கள் வேதத்திலுந் தெளிவா
ய் அறிந்துகொள்ளலாம்.

அப்படியே கிறிஸ்துமார்க்கத்திலுஞ் சத்தி
யத்தை அநியாயத்திலுலே அடக்கிக் கொள்ளு
கிற மனிதருடைய எவ்வாவித அவபத்திக்கும்
அநியாயத்திற்கும் விரோதமாய்ப் பராபரனு
டைய கோபம் வானத்திலிருந்து வெளிப்படு
கின்றது. அதெப்படியென்றுற் பராபரனைக்
குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே
வெளிப்பட்டிருக்கின்றது. பராபரனே அ
தை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். எப்
படியென்றால் உலகமுண்டானது முதற்கொ

ண்டு அவருடைய நித்திய வல்லமை தேவ தத்துவமென்பவைகள் காணப்படாதவைக ளாயிருந்தும் உண்டாக்கப்பட்டிருக்கிற வஸ் துக்களிலுலே தெளிவாய் அறியப்படும். ஆ தலால் அவர்கள் போக்குச் சொல்லிக்கொள் ளுகிறதற்கு இடமில்லை. அவர்கள் பராபர னை அறிந்தும் அவரைப் பராபரனென்று பு கழாமலுந் தோத்திரஞ் செய்யாமலுமிருந்து தங்கள் யோசனையிலுலே வீணராளுர்கள். பு த்தியில்லாத அவர்களுடைய இருதயம் இருள் அடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளெ ன்று சொல்லிப் பயித்தியகாரராகி அழிவில்லா த தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனி தர் பறவைகள் மிருகங்கள் ஊர்வனவென்றி னவைகளுடைய சொரூபமாக மாற்றினுர்கள். அதற்காக அவர்கள் தங்கள் இருதயங்களின் இச்சைகளிலுலே ஒருவரோடொருவர் தங்க ள் சரீரங்களைக் கன இனப்படுத்தத் தக்கதா கப் பராபரன் அவர்களை அசுத்தத்திற்கு ஒ ப்புக்கொடுத்தார். பராபரனைக் குறித்தறிந் த சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி என்றென்றைக்குந் துதிக்கப்படத்தக்க சிரு ட்டிகரைப் பார்க்கிலுஞ் சிருட்டியைத் தொ ழுதுகொண்டு சேவித்தபடியிலுலே பராப ரன் அவர்களை இகழ்ச்சியுள்ள ஆசைகளுக்கு ஒப்புக்கொடுத்தாரென்று, உரோமர். க. அதி. யஅ—உரும். வசனங்களிலே சொல்லப்பட் டிருக்கின்றது.

இப்படி அறிந்திருந்தும் வந்தது வருகிற

தேவர்கள் மூன்றோர்கள் நடந்தபடி நாங்க ளும் நடப்போமென்று சொல்லி மோசம் போகாமல் மேற்குறித்த தேவ லட்சணங்கள் உள்ளவரும் ஆதிகாரணருமான கடவுளை வழி பட்டு மோட்சஞ் சேர வகைபார்ப்பீர்களாக.

முற்றிற்று.